**செய்தி வெளியீடு எண்: 383** **நாள்: 24.05.2008**

**பத்திரிக்கை செய்தி**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. முதற்கட்டமாக உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை தாம்பரம் மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு தாம்பரம் மண்டலம், மேடவாக்கம் அரசினர் மாதிரி நடுநிலைப் பள்ளியில் 27.05.2008 அன்று காலை 10.00 மணிக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் மக்கள் குறைதீர் கூட்டம் நடத்த உள்ளார்கள். இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட செயல்பாடுகளில் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொது மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்படும் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தாம்பரம் மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை .**